# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | STC.930/2025 | Date | : | 11.08.2026 |
| Deposition of Witness for | : | அ.சா.1 | Taluk | : | |
| Name | : | திரு. சண்முகக்குமார் | Calling | : | |
| Father Name | : | | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 11.08.2026.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.10.2024 ம் தேதி, இரவு சுமார் 07.00 மணிக்கு நானும், SSI திரு.சின்னண்ணன், முதல்நிலை காவலர் திரு.மோகன்ராஜ் மற்றும் முதல்நிலை காவலர் திரு.சந்திரஹாசன் ஆகியோர்களுடன் சீட்டு விளையாடுவது குறித்து கிடைத்த ரகசிய தகவலின்பேரில், தேவூர் காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, அரசிராமணி கிராமம், குள்ளம்பட்டி கருணாநிதி காம்ப்ளக்ஸ் அருகே கண்காணித்துக்கொண்டு சென்றபோது, அங்கு ஒரு அறையில் பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து 1) மாரிமுத்து, த/பெ.கந்தசாமி, குஞ்சாம்பாளையம் என்றும், 2) தங்கராஜ், த/பெ.ராஜாகவுண்டர், கொடக்கவுண்டனூர் என்றும், 3) தமிழ்செல்வன், த/பெ.பழனி, மலங்காடு என்றும், 4) சின்னசாமி, த/பெ.அர்த்தனாரி, காந்தி நகர், குள்ளம்பட்டி என்றும், 5) ராமர், த/பெ.அர்த்தனாரி, ஆத்துக்காடு என்றும், 6) ராஜசேகர், த/பெ.மணி, எடப்பாடியான்காடு என்றும், 7)

ஆறுமுகம், த/பெ.ராமு, மாரிக்கவுண்டன்காடு என்றும், 8) ஜெயபால், த/பெ.தங்கராஜ், கொடக்கவுண்டனூர் என்றும் கூறினார்கள்.

2) மேலும் விசாரிக்க அவர்கள் தரையில் உட்கார்ந்து சீட்டை வைத்து உள்ளே, வெளியே ஜெயிக்குது, தோக்குது என்று பணம் வைத்து மங்காத்தா ஆட்டம் விளையாடியதை ஒப்புக்கொண்டவர்களை கைதுக்கான காரணம் கூறி இரவு சுமார் 07.30 மணிக்கு கைது செய்தும், அவர்களிடம் இருந்து 52 சீட்டுகள் கொண்டு சீட்டுகட்டுகள் எண்ணிக்கை - 2 மற்றும் பணம் ரூ.11,290/- மற்றும் சிம் கார்டு இல்லாத செல்போன்கள் - 6 (1. VIVO Y27 செல்போன், 2. Oppo Reno10 5G செல்போன், 3. Redmi 9A செல்போன், 4. Realme C2 செல்போன், 5. VIVO செல்போன், 6. LAVA செல்போன்) ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியபோது பொதுஜன சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் உடனிருந்த SSI திரு.சின்னண்ணன் மற்றும் முதல்நிலை காவலர் திரு.சந்திரஹாசன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றினேன். மேற்படி கைப்பற்றுதல் மகசரில் SSI திரு.சின்னண்ணன் மற்றும் முதல்நிலை காவலர் திரு.சந்திரஹாசன் என்பவரும் சாட்சி கையொப்பம் பெற்றேன். (**கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆகவும், 52 எண்ணிக்கை கொண்ட சீட்டுகட்டுகள்-2, பணம் ரூ.11,290/- மற்றும் சிம் கார்டு இல்லாத செல்போன்கள் - 6 ஆகியவை அ.சா.பொ.1 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது**).

3) பின்னர், கைது செய்த எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் இரவு சுமார் 10.00 மணிக்கு நிலையம் வந்து எதிரிகளின்மீது தேவூர் காவல் நிலைய குற்ற எண்.184/2024, சட்டப்பிரிவுகள் 8, 12 of TNG ACT-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை

பதிவு செய்தேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4) பின்னர், விசாரணை செய்ததில் கட்டிடத்தின் உரிமையாளரான கருணாநிதி, என்பவருக்கு தெரியாமல் 4ம் எதிரி சின்னுசாமி, என்பவர் அறையை வாடகைக்கு எடுத்து, மற்ற எதிரிகளுடன் சேர்ந்து சீட்டு விளையாடியுள்ளார் என்றும், கருணாநிதிக்கு இந்த குற்ற சம்பவத்தில் தொடர்பில்லை என்று தெரியவந்ததால் அவரை இந்த வழக்கில் இருந்து நீக்கி எதிரிகள் நீக்குதல் அறிக்கையை கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன் (**எதிரிகள் நீக்குதல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

5) பின்னர், கைப்பற்றிய வழக்கு சொத்துக்களை படிவம்-91ன் மூலம் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன் (**படிவம்-91 அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர், இவ்வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் திரு.அருண்குமார், அவர்களின் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரனை செய்தார்.

**குறுக்கு விசாரணை -**

1) எங்களுக்கு சீட்டு விளையாடுவதாக ரகசிய தகவல் கிடைத்ததா என்றால் ஆமாம். எத்தனை மணிக்கு காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்தது என்றால் சரியாக ஞாபகமில்லை. யார் யார் என்னென்ன வாகனத்தில் சென்றோம் என்றால் நானும், முதல்நிலை காவலர் திரு.சந்திரஹாசன் ஒரு இருசக்கர வாகனத்திலும், SSI திரு.சின்னண்ணன் மற்றும் முதல்நிலை காவலர் திரு.மோகன்ராஜ் ஒரு இருசக்கர வாகனத்திலும் சென்றோம். எந்தெந்த வழியாக சென்றோம் என்றால் குள்ளம்பட்டி வழியாக எடப்பாடி சாலையில் சென்றோம், என்ன திசை என்று

தெரியவில்லை.

2) குள்ளம்பட்டிக்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் மாலை சுமார் 04.30 மணிக்கு சென்றோம். குள்ளம்பட்டி செல்லும் வரையில் வேறு யாரையாவது தணிக்கை செய்தோமா என்றால் இல்லை, நேரடியாக எதிரிகள் சீட்டு விளையாடிய இடத்திற்கு தான் சென்றோம். சீட்டு விளையாடிய இடம் யாருக்கு சொந்தமானது என்றும், அதன் கதவு எண்ணை குறிப்பிட்டு இந்த வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், காம்ப்ளக்ஸ்-ன் பெயரை குறிப்பிட்டுள்ளேன். மேற்படி, காம்ப்ளக்ஸ் யாருக்கு சொந்தமானது என்று கிராம நிர்வாக அலுவலரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

3) நாங்கள் அங்கு சென்றபோது எதிரிகள் எந்தெந்த திசையில் உட்கார்ந்திருந்தார்கள் என்றால் சரியாக ஞாபகமில்லை. எதிரிகளிடம் இருந்து எந்த சீட்டுகளை யார் யாரிடம் இருந்து எத்தனை சீட்டுகளை கைப்பற்றினோம் என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகளிடம் தனித்தனியாக எவ்வளவு சீட்டு கட்டுகள் இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட ரூ.11,290/-தொகையை யாரிடம் இருந்து எவ்வளவு தொகை கைப்பற்றப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

4) இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட செல்போன்கள் யாரிடம் இருந்து எந்தெந்த செல்போன்கள் கைப்பற்றப்பட்டது என்றும், செல்போன்கள் யாருடையது என்றும், அதில் உள்ள சிம் கார்டுகள் யாருடையது என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், எதிரிகளிடம் இருந்து சீட்டு கட்டுகள் எதுவும் கைப்பற்றவில்லை என்றும், பணமும் கைப்பற்றவில்லை என்றும், புள்ளிவிவர கணக்கிற்காக எதிரிகள்மீது பொய் புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,

Sd/-Shanmugakumar

Judicial Magistrate No.1,
Sankari.

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : STC.930/2025 | Date | : 11.08.2026 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : திரு. மோகன்ராஜ் | Calling | : |
| Father Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 11.08.2026.
<u>(எதிரி ஆஜர்).</u>

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>** :

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி நெடுஞ்சாலை ரோந்து பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.10.2024 ம் தேதி, இரவு சுமார் 07.00 மணிக்கு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சண்முகக்குமார், என்பவருடன் நானும், SSI திரு.சின்னண்ணன் மற்றும் முதல்நிலை காவலர் திரு.சந்திரஹாசன் ஆகியோர்களுடன் சீட்டு விளையாடுவது குறித்து கிடைத்த ரகசிய தகவலின்பேரில், தேவூர் காவல் நிலைய சரக எல்லைக்குட்பட்ட, அரசிராமணி கிராமம், குள்ளம்பட்டி கருணாநிதி காம்ப்ளக்ஸ் அருகே கண்காணித்துக்கொண்டு சென்றபோது, அங்கு ஒரு அறையில் பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து 1) மாரிமுத்து, த/பெ.கந்தசாமி, குஞ்சாம்பாளையம் என்றும், 2) தங்கராஜ், த/பெ.ராஜாகவுண்டர், கொடக்கவுண்டனூர் என்றும், 3) தமிழ்செல்வன், த/பெ.பழனி, மலங்காடு என்றும், 4) சின்னசாமி, த/பெ.அர்த்தனாரி, காந்தி நகர், குள்ளம்பட்டி என்றும், 5) ராமர், த/பெ.அர்த்தனாரி, ஆத்துக்காடு என்றும், 6) ராஜசேகர், த/பெ.மணி, எடப்பாடியான்காடு என்றும், 7) ஆறுமுகம், த/பெ.ராமு, மாரிக்கவுண்டன்காடு

என்றும், 8) ஜெயபால், த/பெ.தங்கராஜ், கொடக்கவுண்டனூர் என்றும் கூறினார்கள்.

2) மேலும் விசாரிக்க அவர்கள் தரையில் உட்கார்ந்து சீட்டை வைத்து உள்ளே, வெளியே ஜெயிக்குது, தோக்குது என்று பணம் வைத்து மங்காத்தா ஆட்டம் விளையாடியதை ஒப்புக்கொண்டவர்களை கைதுக்கான காரணம் கூறி இரவு சுமார் 07.30 மணிக்கு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் கைது செய்தும், அவர்களிடம் இருந்து 52 சீட்டுகள் கொண்டு சீட்டுகட்டுகள் எண்ணிக்கை - 2 மற்றும் பணம் ரூ.11,290/- மற்றும் சிம் கார்டு இல்லாத செல்போன்கள் - 6 (1. VIVO Y27 செல்போன், 2. Oppo Reno10 5G செல்போன், 3. Redmi 9A செல்போன், 4. Realme C2 செல்போன், 5. VIVO செல்போன், 6. LAVA செல்போன்) ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியபோது பொதுஜன சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராததால் உடனிருந்த SSI திரு.சின்னஅண்ணன் மற்றும் முதல்நிலை காவலர் திரு.சந்திரஹாசன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றார்.

3) பின்னர், கைது செய்த எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் இரவு சுமார் 10.00 மணிக்கு நிலையம் வந்து எதிரிகளின்மீது தேவூர் காவல் நிலைய குற்ற எண்.184/2024, சட்டப்பிரிவுகள் 8, 12 of TNG ACT-ன் கீழ் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். இது சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>குறுக்கு விசாரணை -</u>

1) எங்களுக்கு சீட்டு விளையாடுவதாக எத்தனை மணிக்கு தகவல் கிடைத்தது என்றால் சிறப்பு காவல் உதவி ஆய்வாளருக்கு தகவல் கிடைத்து, நான்

அவருடன் சென்றேன். யார் யார் என்னென்ன வாகனத்தில் சென்றோம் என்றால் நாங்கள் நான்குபேரும் தனித்தனி வாகனத்தில் சென்றோம். சம்பவ இடம் செல்வதற்கு முன்பு வேறு யாரையாவது தணிக்கை செய்தோமா என்றால் இல்லை, நேரடியாக சம்பவ இடத்திற்கு தான் சென்றோம்.

2) சம்பவ இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்றால் இரவு சுமார் 07.00 மணிக்கு சென்றோம். எதிரிகளிடம் யார் யாரிடம் என்னென்ன சீட்டு கட்டுகள் இருந்தது என்று நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரிகளிடம் யார் யாரிடம் எவ்வளவு பணம் இருந்தது என்று நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட செல்போன்கள் யாரிடம் இருந்து எந்தெந்த செல்போன்கள் கைப்பற்றப்பட்டது என்றும், செல்போன்கள் யாருடையது என்றும், அதில் உள்ள சிம் கார்டுகள் யாருடையது என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

3) நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், எதிரிகளிடம் இருந்து சீட்டு கட்டுகள் எதுவும் கைப்பற்றவில்லை என்றும், பணமும் கைப்பற்றவில்லை என்றும், புள்ளிவிவர கணக்கிற்காக எதிரிகள்மீது பொய் புகார் பதிவு செய்து அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Mohanraj